DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. -160/2025

Prosecution PW -1

| Name | திரு.டி.கண்ணன் | Occupation |
|---|---|---|
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 09.03.2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused present.

முதல் விசாரணை

நான் தமிழ்நாடு காவல்துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று சிதம்பரத்தில குடியிருந்து வருகிறேன். கடந்த 03.09.2007 ம் தேதி அண்ணாமலை நகர் காவல் நிலைய ஆய்வாளராக பணியிலிருந்த போது 14.00 மணிக்கு நானும், தலைமைக்காவலர் பன்னீர்செல்வம், உதவி ஆய்வாளர் பொன்ராஜ் ஆகியோருடன் மதுவிலக்கு சம்பந்தமாக பெராம்பட்டு கிராமத்தில் ரோந்து பணியிலிருந்தபோது, பெராம்பட்டு பஸ் நிறுதத்தில் ஒரு மஞ்சள் துணிப்பையுடன் சந்தேகப்படும்படியாக ஒரு நபர் நின்றுகொண்டிருந்தார். அவரைப் பிடித்து விசாரிக்க அவர் தன் பெயர் ராஜேந்திரன் என்று பெயர் விலாசத்துடன் கூறினார். அவர் வைத்திருந்த மஞ்சள் நிற துணிப்பையை சோதனை செய்ய கஞ்சா தூள் இருந்தது. கஞ்சா வைத்திருந்த குற்ற காரணம் கூறி எதிரியை கைது செய்தேன். பின்னர் எதிரி வைத்திருந்த கஞ்சாவை எடைபோட்டுப்பார்க்க 1.250 கிலோ இருந்தது. அதிலிருந்து மாதிரிக்காகவும், பகுப்பாய்விற்காகவும், தலா இரண்டு 50 கிராம் வீதம் எடுத்து வெள்ளை பேப்பரில் மடித்து நூலால் கட்டி SHO சீல் வைத்தேன். மாதிரி கஞ்சாக்கள் சா.பொ.**1,2.** மீதமுள்ள கஞ்சா 1.150 கிலோவை வெள்ளை பேப்பரில் மடித்து நூலால் கட்டி SHO சீல் வைத்தேன். மீதமுள்ள கஞ்சா சா.பொ.**3.** பின்னர் மாதிரி கஞ்சாவையும், மீதமுள்ள கஞ்சாவையும் தலைமைக்காவலர் பன்னீர் செல்வம், உதவி ஆய்வாளர் பொன்ராஜ் முன்னிலையில் மகசரில் 14.00 மணிக்கு கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அதசாஆ.**1.** பின்னர் 20.00 மணிக்கு எதிரி மற்றும் தடயச்சொத்துடன் நிலையம் வந்து

நிலையக் குற்ற எண்.309/2007 பிரிவு 20(I)(b) NDPS Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ**.2.** பின்னர் சாட்சிகள் பன்னீர்செல்வம், பொன்ராஜ், நட்ராஜன், முரளி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியைவும் தடயச்சொத்தையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் வழக்கின் மாதிரி தடயத்தை இரசாயணப்பகுப்பாய்விற்காக இரண்டாம் நிலை காவலர் ராஜராஜன் என்பவர் மூலம் தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்க அனுப்பி வைத்தேன். பின்னர் இரண்டாம் நிலை காவலர் ராஜராஜன் மற்றும் தடயத்தை பகுப்பாய்வு செய்து அறிக்கை வழங்கிய தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் உதவி இயக்குநர் காளிமுத்தன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பகுப்பாய்வு அறிக்கை பெற்றேன். பகுப்பாய்வு அறிக்கை அதசாஆ**.3.** இத்துடன் என் விசாரணையை முடித்து எதிரியின் மீது பிரிவு 20(I)(b) NDPS Act ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்</u>

03.09.2007 ம் தேதி பெராம்பட்டு கிராமத்திற்கு ரோந்து பணிக்கு சென்றதாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பெராம்பட்டு பஸ் நிறுத்தத்தில் எதிரிகைய கைது செய்யும் போது அங்கிருந்த பொதுமக்கள் யாரையும் சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட வில்லை என்றால் யாரும் சாட்சியம் அளிக்க வரவில்லை, அருகிலுள்ள நிரந்தர குடியிருப்பு மற்றும் கடையிலுள்ள நபர்களை சாட்சியாக அழைக்கவில்ல என்றால் சரிதான். கைப்பற்றுதல்மகசர் நான் தான் தயார் செய்தேன். கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகளின் கையொப்பம் மற்றும் என்னுடைய கையொப்பம் மட்டும வேறு இங்கால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் பெராம்பட்டு பஸ் நிறுதத்தில் வைத்து தான் அதிலுள்ள விவரங்கள் அனைத்தும பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் குற்ற எண். சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 03.09.2007 ல் கைப்பற்றப்பட்ட தடயப்பொருள் நீதிமன்றத்திற்கு 19.09.2007 ல் தான் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் தடயப்பொருள் எங்கு யார் வசம் இருந்தது என்பதனை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சொன்ன நேரம் நாள் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், எந்த தடய பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் தடய பொருட்களும் காவல் நிலையத்தில்

பின்னிட்டு தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.  முறையாக புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறான இறுதி குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால்  சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

ஒம்/-...ஜி.சுந்தரராஜன்,
கூடுதல் மாவட்ட(ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்